
# சைவ முரசு

வெளியீடு தமிழ்ச் சைவப் பேரவை     ஆவணி - புரட்டாதி 2022     இதழ் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்லோட் வைத்தியசாலை, இணுவில்



- விசேட IUI, IVF கருவள சிகிச்சைகள் எம்மிடம் மட்டுமே
- சத்திர சிகிச்சைக்கூட வசதி

(அனைத்து சத்திர சிகிச்சைகளும் குறைந்த நியாயமான கட்டணத்தில்)

- Laparoscope, Hysteroscope வசதி
- அனைத்து வைத்திய நிபுணத்துவ சேவைகள்
- 24 மணிநேர OPD, விடுதி வசதிகள்
- Endoscope வசதி
- பல் வைத்திய சேவைகள்
- கண் சிகிச்சை
- X - Ray, HSG வசதி
- மருத்துவ ஆய்வுகூட வசதி
- Ultra Sound Scan வசதி
- ECG, ECHO வசதி
- Ambulance சேவை
- ETC வசதி



தொடர்புகளுக்கு : 021 2241569, 076 3944346, 077 1215005

கே.கே.எஸ் வீதி. இணுவில்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பருவ வெளியீடு
பொறுப்பு
யாழ்ப்பாணம்

அன்பே சிவம்

# நமது நோக்கு

தமிழ்ச் சைவத்தைப் பற்றிய ஆழமான புரிதலை இலகுலான முறையில் எம் நாயன்மார் வாழ்ந்து காட்டிய வழி முறைகளோடு இளையோருக்கு கொண்டு சேர்க்கும் வகையில் இந்த சைவத்தமிழ் இரு திங்கள் ஏடு நல்லூர் கந்தனின் பெருந்திருவிழா நாட்களில் மலர்கின்றது.

இறை ஆகமம் திருமந்திரம்,இறைவேதம் தேவார திருவாசகங்கள், உள்ளிட்ட சைவத்தமிழ் நூல்களில் மிக ஆழமான மெய்யியல் கருத்துக்களும் அதனைக் கடந்து வாழ்வியல் தரிசனங்களும் மிகவும் அழகாக கூறப்பட்டுள்ளன. அவற்றை பல்வேறு பரிணாமங்களின் இந்த ஏடு வெளிகொணர உள்ளது.

ஈழத்தின் சைவத்தமிழ் வரலாற்று பொக்கிசங்களின் மீது இளையோருக்கு விழிப்புணர்வை பற்றுதலை ஏற்படுத்துவதும் இந்த சஞ்சிகையின் இன்னோர் நோக்கமாகும்.

சுருங்கக்கூறிய சீரிய சிவநெறிச் சிந்தனைகள் ஊடாக ஒழுக்கமிக்க அறநெறிப்பண்புடைய வளமான சைவத்தமிழ் சமுதாயத்தை கட்டி யெழுப்புவதே இந்த பருவ ஏட்டின் தூரநோக்கு ஆகும்.

அனைத்து சைவத்தமிழர்களும் இதற்கு பேராதரவு தரவேண்டும் என்பதும் குறிப்பாக எதிர்கால தலைவர்களாகிய குழந்தைகளுக்கு இதனைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதும் தமிழ்சைவப் பேரவையின் சைவமுரசு ஆசிரிய பீடத்தின் பேரவாவாகும். அதற்கு இறை சிவன் அருளை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**தமிழ் எங்கள் மொழி சைவம் எங்கள் வழி**

*ஆசிரிய பீடம்*
*சைவமுரசு*
*தமிழ்ச் சைவப் பேரவை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காப்பாளர்கள் :-** **சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** (நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்)
**தவத்திரு அகத்தியர் அடிகளார்**
(தென்கயிலை ஆதீனம், திருகோணமலை)
**தவத்திரு உமாபதி சிவம் அடிகளார்**
(மெய்கண்டார் ஆதீனம், கீரிமலை)
**தவத்திரு திருஞானசோதி அடிகளார்**
(திருநாவுக்கரசர் ஆதீனம், நுவரெலியா)
**சிவத்திரு ஆறு திருமுருகன்**
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
**சிவத்திரு இ.வசந்தசேனன்**
(தலைவர், தமிழ்ச் சைவப் பேரவை)
**சிவத்திரு ஆ.நவரெத்தினராசா**
(அறங்காவலர், வவுனியா கோவிற்குளம் சிவன்கோவில்)
**சிவத்திரு ஸ்ரீ.சக்திவேல்**
(தலைவர், சைவபரிபாலன சபை)
**சிவத்திரு சோ.பத்மநாதன்**
(தலைவர், சைவ வித்யா விருத்தி சங்கம்)
**சிவத்திரு நா.சண்முகரெத்தினம்**
(தலைவர், சைவ மகாசபை)
**சிவச்செல்வி கு.சோதிநாயகி**
(தலைவி, சிவமங்கையர் அமைப்பு)
**திருமதி சி.சுகந்தினி**
(பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம், யாழ்பல்கலைக்கழகம்)

**இணை ஆசிரியர்கள் :-** **எந்திரி. சர்வா சர்வானந்தன்**
மருத்துவர் **பரா.நந்தகுமார்**

**துணை ஆசிரியர்கள் :-** மருத்துவர் **தி.சுதர்மன்**
**திரு.தி.ரமணராஜா**

**சிவப்பிராந்திய இணைப்பாளர்கள் :-**
**திரு அ.சிவஞானசுந்தரம்**
**திரு க.கணேசன்**
**திரு சு.சிவசங்கரன்**
**திருமதி ரேணுகா செந்தில்குமரன்**
**திருமதி ஜனனி உதயசங்கர்**
**திரு த.சுகந்தன்**
**திரு வி.நளின்பிரசாத்**
**திரு வ.பிரவீன்**

**இணைய வடிவமைப்பு : -** **திரு.த.சிவரூபன்**

**பதிப்புரிமையும் வெளியீடும்: -** **தமிழ்ச் சைவப் பேரவை, இலங்கை**

**அச்சுப்பதிப்பு : -** **நாவலர் அச்சகம், யாழ்ப்பாணம்.**

**விலை : -** 50/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அன்பே சிவம்"

# சைவமுரசு மலரும் தருணம் தமிழ்ச் சைவப் பேரவை தலைவர் உள்ளத்திலிருந்து...

தமிழ்ச் சைவப் பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு ஒரு வருட பூர்த்தியாகிறது என்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இப் பேரவையின் நோக்கமே எமது சைவசமயத்தையும் அதன் பண்பாடுகளையும் மக்கள் மத்தியில் இலகுவாக பரப்பி ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதுடன் மேன்லேும் அதனை விருத்தி செய்து ஆலமரம் போன்று வளர்த்து எடுப்பதே நோக்கமாகும். அப்போது தான் நாம் எந்த இந்து சைவ சபையை சார்ந்தவர்களாக இருப்பினும் எம்மிடையே ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தி ஒரு குடையின் கீழ் நாம் எல்லோரும் ஒருவர் என்ற கோட்பாட்டுக்கு அமைய எமது பிரச்சினைகளை நாமே இலகுவாக அடையாளம் கண்டு அவற்றை நாமே ஆராய்ந்து பேசி ஒற்றுமையாக ஏற்கக்கூடிய முடிவை எட்டுவதற்கு வழிசமைக்கும் உதாரணமாக தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நூற்றுக்கு 99% ஆலயங்கள் தொடர்பாக பிணக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

**இப் பிணக்குகள் யாவும் நாமே விட்டுக்கொடுத்து தீர்க்கப்பட வேண்டிய தொன்றாகும். ஆனால் நம்மக்கள் அதனை நாடாது தமது பணத்தையும் ஆலய பணத்தையும் நேரத்தையும் விரயமாக்கியும் குறிப்பிட்ட ஆலய அடியார்கள் மத்தியில் ஓர் கசப்பான உணர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.** இவற்றுக்கு எல்லாம் அடிப்படையான காரணம் "ஆணவம்" நான் பெரிதா வேர் பெரிதா இதனை மையமாக கொண்டே சகல பிரச்சினைகளும் எழுகின்றன. இவற்றுக்கு காரணம் எமது சைவசமயத்தில் சொல்லப்படும் நல்ல அரிய கருத்துக்களை நாம் செவிமடுப்பதே தவிர அவற்றை எமது நாளாந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தவறுவதே ஆகும். எனவே தற்போதைய காலகட்டத்தில் எமது சமயத்தில் ஓர் புரட்சியை ஏற்படுத்துவதே காலச்சிறந்த வழி எமது சமய தத்துவங்களை, கருத்துக்களை இளம்வாலிபர்கள் மட்டத்தில் கொண்டு சென்று அவர்கள் மத்தியில் சமய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் அவர்களையும் எம்முடன் இணைத்து செல்ல வேண்டிய நியதி ஏற்பட்டுள்ளது. எனவே எமது சைவத்தமிழ்ப் பேரவை எடுத்துள்ள முயற்சியான இவ் சஞ்சிகை வெளியீடு காலத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் இதழாக மலரவேண்டும் எனவும் அதற்கு எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசியும் அருளும் கிடைக்கவேண்டுமென்றும் பிராத்திக்கிறேன்.

மேனாள் நீதிபதி **இ. வசந்தசேனன்**
தலைவர், தமிழ்ச் சைவப்பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஊருக்கு நல்லது சொல்வேன்**
**எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்**



## இளையோரிடையே போதைப் பாவனை சிவபூமி அறக்கட்டளை தலைவர் மன வேதனை

எத்தனையோ புண்ணிய ஆத்மாக்கள் வாழ்ந்த கந்தபுராண கலாச்சார சிவபூமியில் இன்று போதை பொருள் பாவனை அதிலும் குறிப்பாக இளைஞர்கள் போதை ஊசி ஏற்றுவது அதிகரித்துள்ள அண்மைக்கால அவல நிலையை சிவபூமி தலைவர் சிவத்திரு. ஆறு திருமுருகன் ஐயா நல்லை ஆதீனத்தில் மிகுந்த மன ஆதங்கத்தோடு நல்லூர் பெருந்திருவிழா தெய்வீகத் திருக்கூட்ட நிகழ்வில் எடுத்துரைத்தார்.

நல்லை ஆதீன 2ம் குருமகா சந்நிதான அருளாட்சி ஏற்பு நிறைவில் உரையாற்றிய போது 40 ஆண்டுகளின் முன் இன்றைய ஆதீனம் மிகவும் இளைஞனாக தன் வாழ்வை சமயத்திற்காக அர்ப்பணித்து தியாக மனப்பாங்குடன் ஆதீனமாக பொறுப்பேற்றதை நினைவு கூர்ந்த போது இன்று இளைய பட்டமாக பொறுபேற்க யார் இந்த மண்ணில் உள்ளத்தூய்மையோடு தொண்டுள்ளத்தோடு வருவார் என்ற மன வருத்தத்தையும் பதிவு செய்தார்.

அண்மையில் இளைஞர்கள் பலர் போதை ஊசி ஏற்றும் பழக்கத்துக்கு அடிமையான நிலையில் அவர்களில் ஒரு தொகுதியினர் சிகிச்சை பெற்று வருவதை மருத்துவத் துறையின் தகவல்களை மேற்கோள்காட்டி சுட்டி காட்டியதுடன் சைவ சமயிகளிற்கு ஆன்மீகவாதிகளிற்கு இந்த துன்ப நிலையை இல்லாதொழிக்க களத்தில் இறங்க செயறபட அறைகூவலும் விடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பே சிவமாகி அமர்ந்திருப்போமே

தென்கயிலை ஆதீனம்

முதற்குரு மகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார்

# திருக்கோணேச்சரம்

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**என் ஆண்டவர்க்கும் இறைவா போற்றி"**

ஈழதமிழ் நாட்டின் கிழக்கு கரையோரம் தென்னைலை என்று அழைக்கப்படும் திருகொணமலை மண்ணில் எழந்தருளி உலகெலாம் ஒளி பரப்பி கொண்டு காத்தருளும் மாதுமை உடன்பிறை கோணேச்சரப் பெருமான் எழுந்தருளிய தலம் **திருக்கோணேச்சரம்**. வாயு தேவனுக்கும் ஆதி சேடனுக்கும் இடையில் நடந்த சண்டையில் வாயுவால் பிடுங்கி எறியப்பட்ட இனியச்சிகரங்கள் மூன்று ஒன்று திருக்கோணேச்சரம் என்பது புராண வரலாறு. இராவனனுடைய காலம் ஏறக்குறைய கி.மு ஆறாயிரம் ஆண்டு என்று கருதப்படுகிறது. இராவணன் தன் தாய்க்காக லிங்கம் பெற இமயத்திற்கு இருமறை சென்றான். இரு முறையும் அவனது முயற்சி தேவர்களின் சூழ்ச்சியால் தோறகடிக்கப்படுகிறது. மூன்றாவது முறை செல்ல முற்படுகையில் திருமால் முனிவர் வேடத்தில் வந்து திருக்கோணேச்சரம் பற்றிச் சொல்ல அது கேட்டு இறைவனிடம் இராவணன் வந்து எம்பெருமானை வழிபட்டடான். பின்பாக சோழர் காலத்தில் குளக்கோட்ட மன்னனால் சற்கோயிலாக மிகப் பிரமாண்டமாக எழுப்பபப்படுகின்றது. அவன் திருக்கோணேச்சரப் பகுதியில் மூன்று கோயில்களை எழுப்பியதாக வரலாறு கூறுகின்றது. பாபனாச சுனை அருகே மாதுமைத் தாய்க்கும் இடையே விஷ்ணுவுக்கும் உச்சியில் எம்பெருமானுக்கும் கோயில் அமைத்து ஆயிரங்கால் மண்டபமும் ஐநூறு அடி உயரமான கோபுரமும் இருந்ததாகவும் இயம்பப்படுகின்றது. கோணேச்சரத்தின் அழகையும் இறை அருளையும் இந்து தமிழ்க் குழந்தை சம்பந்தர் பெருமான் அழகாக எடுத்துக்காட்டுகின்றார். இத்தனை சிறப்பு மிகு ஆலயம் அந்நியர் வருகையால் அழிக்கப்பட்டது. அன்று தொட்டு இன்று வரை திருக்கோணேச்சரம் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. **தீதுக்கள் ஆயிரம் நேரினும் மோதும் அலை வேதம் சொல்லும் பதியாம் திருகோணமலை மண்ணில் என்றும் தமிழ் ஒலிக்கும்** உலகம் உள்ள வரை தமிழ் நம் மண்ணில் கோலோச்சும் ஏற்றும் இதுவே இறை அருள் சிவன்

## ஆலமரத்தின் கீழ் அறம் சொன்ன இறை சிவன்



**சைவ சித்தாந்த உட்பொருளை முனிவர்களிற்கு ஆலமர நிழலில் அறம் சொன்ன தத்துவத்தை அழகாக பக்தி ரசம் சொட்டும் மாணிக்க வாசகங்களை திருவாசகமாக தந்த மணிவாசகர் எடுத்து காட்டுகின்றார் விசேடமாக கல்லால மரம் எனும் ஆலமர வகையை சார்ந்தது என சித்தர்களால் சுட்டப்படுகின்றது திருவண்ணாமலையிலும் திருக் கோணேச்சரத்திலும் கல்லால மரம் தலவிருட்சமாக காணப்படுகின்றது. அற்புதமான பல பலன்களை அளிக்கும் ஆலம் வித்தின் மகிமைகளையும் பல்லாயிரம் பறவைகளிற்கும் மாந்தர்களிற்கும் உறைவிடமும் நிழலும் தந்து மழையை வருவித்தலிலே மேகங்களை குளிர்விக்கும் ஆற்றலிலே பெரும்பங்கு வகிக்கும் சிவ விருட்சமாம் ஆலமரத்தை ஊர்கள் தோறும் நடுவோம். பாதுகாப்போம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சைவப் பேரவை ஓர் அறிமுகம்

இப்பேரவையானது அகில இலங்கை ரீதியான சைவத் திருக்கோவில்கள், சைவ அமைப்புக்களின் ஒன்றிணைந்த கூரை அமைப்பு எனப் பொருள்படும்

**தொலைநோக்கு**

இலங்கையின் தமிழ்ச் சைவ அமைப்புக்களையும் சைவத் திருக்கோவில்களையும் பொது வேலைத் திட்டத்தில் ஒன்றிணைத்து சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல்

**குறிக்கோள்கள்**

1. சைவத் திருக்கோவில் களின் ஆலயம் சமூக மையம் எனும் எண்ணக்கருவை உறுதிப்படுத்தவும் பிணக்குகளை சுமூகமாக தீர்க்கவும் பொது ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்கவும் சகல தளங்களிலும் உழைத்தல்
2. சைவ அமைப்புக்கள் தங்கள் சுயாதீனத்தை பேணியவாறே பொது வேலைத் திட்டத்தை பிரதேச / பிராந்திய / அகில இலங்கை ரீதியில் முன்னெடுக்கும் வகையில்ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்
3. தமிழ் சைவர்களின் ஆன்மீக, வாழ்வியல் முன்னேற்றங்களுக்கு உழைத்தல்
4. தமிழ் சைவத்துடன் தொடர்புபட்ட கலைகளான பரதம், பண்ணிசை, கூத்து யோகாசனம், சித்த மருத்துவம், இயற்கை விவசாயம் என்பவற்றின் வளர்ச்சியில் பங்காற்றல்
5. தமிழ்ச் சைவர்களின் பக்தி கருவூலங்களான பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் என்பவற்றை பக்தி இயக்கமாக சமூகத்தின் சகல தளங்களிற்கும் எடுத்து செல்லல்
6. சைவச் சிறார்களின் அறநெறி மேம்பாட்டுக்கு உதவுதலும் இலங்கை பூராகவும் உள்ள சைவச் சிறார் இல்லங்களின் வளர்ச்சியில் பங்களித்தலும்
7. நலிவுற்ற விசேட தேவைப்பாடுடைய மக்களின் வாழ்வியல், மருத்துவ கல்வி போசாக்கு நடவடிக்கைகளில் உதவும் வகையில் சைவ அறப்பணி நிதியத்தை உருவாக்கலும் ஏற்கனவே அமைப்புக்கள் ஆலயங்களினால் முன்னெடுக்கப்படுவற்றை வலுப்படுத்தலும்.
8. தமிழ் சைவர்களின் பூர்வீக தொல்லியல் மரபுரிமைகளை உறுதி செய்தலும் பாதுகாத்தலும்
9. தமிழ் சைவர்களின் தார்மீக உரிமைகளை பெற்றுக் கொள்ளவும் உறுதி செய்யவும் உழைத்தல்
10. சைவத்தமிழ் மறுமலர்ச்சிக்கு தேவையான சகல வேலைத் திட்டங்களையும் ஒன்றிணைந்த கட்டமைப்பாக முன்னெடுத்தல்.

மேற்காணும் பத்து அம்ச . திட்டத்தை குறிக்கோள்களாகக் கொண்டு சித்திரை புது வருடத்தின் ஒட்டிய காலப்பகுதியில் 18.04.2021 ஆதீன குருமகா சந்நிதானங்கள் திருமுன்னிலையில் நல்லை ஆதீனத்தில் அறிமுக ஒருங்கிணைப்பு கூட்டம் இடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக் கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் அம்மையாரின் தேவார பாராயணத்துடன் ஆதீன குருமகா சந்நிதானங்கள், இந்து, சைவக் குருமார் ஒன்றிய தலைவர்கள் , சிவபூமி தலைவர், ஆறு. திருமுருகன் ஐயா ஆகியோரின் அருளாசி உரைகளுடன் மேனாள் சைவ பரிபாலன சபை தலைவர் ஓய்வு நிலை, நீதிபதி வசந்தசேனன் ஐயா தலைமையில் கூட்டம் ஆரம்பாகியது.

முன்னாள் அரச அதிபர் திரு வேதநாயகன், திருக்கேதீச்சர திருப்பணிச் சபை செயலாளர் முன்னாள் இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானாந்தராசா, .சைவ மகா சபைத் தலைவர் நா. சண்முகத்தினம், கிளிநொச்சி திருநெறிக் கழக செயலாளர் திரு. அ சிவஞானம், சைவ வித்யா விருத்தி சங்க தலைவர் சோ. பத்மநாதன், சைவ பரிபாலன சபை தலைவர் திரு. ஸ்ரீ. சக்திவேல் உள்ளிட்ட யாழ் - கிளிநொச்சி சைவ சமய அமைப்புக்களின் தலைவர்கள் அறங்காவலர்கள் இந்து கற்கைகள் பீடாதிபதி விரிவுரையாளர்கள் , புலமைசார் சைவச் சான்றோர்கள், சிவதொண்டர்கள் பங்கேற்றனர்.



சைவ மகா சபை பொதுச் செயலாளர் மருத்துவர் நந்தகுமாரின் ஒருங்கிணைப்பு உரையையும் ஒருங்கிணைந்த கூரை அமைப்பிற்கான தேவைப்பாடுகள் வேலைத்திட்டங்களை எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற பலரும் தீர்மானமிக்க ஒருங்கிணைக்கும் சக்தியாக பல்வேறு அமைப்புக்களும் இணைந்து சைவத்தமிழ் மக்களிடையே ஆன்மீக -மனிதநேய வேலைத்திட்டத்தை ஒருங்கிணைந்த கட்டமைப்பாக முன்னெடுப்போம் முடிவு செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக அகில இலங்கை ரீதியான நிகழ்நிலை கலந்துரையாடல்களை தொடர்ந்து விஜயதசமி அன்று சைவ பரிபாலன சபையில் கூடிய சைவ அமைப்புக்களின் தலைவர்கள் , பிரதிநிதிகள், சிவதொண்டர் சிவமங்கையர் தமிழ்ச் சைவப் பேரவை உத்தேச யாப்புடன் அங்குரார்ப்பணம் செய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனாள் நீதிபதி இ.வசந்தசேனன் தலைவராகவும், மேனாள் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் பிரதித் தலைவராகவும், மருத்துவர் தி. சுதர்மன் பொதுச் செயலா ளராகவும், மருத்துவர் பரா நந்தகுமார் ஒருங்கிணைப்பாளர் மற்றும் துணைப் பொதுச் செயலாளராகவும் திரு. த.சிவரூபன் பொருளாளராகவும் அனைத்து சிவப் பிராந்தியங்களிலிருந்து 5 உபதலைவர்கள் உட்பட 25 பேர் கொண்ட செயற்குழு தேர்வு செய்யப்பட்டது.



தொடர்ந்து பல நிகழ்நிலை (zoom) கலந்துரையாடல்களும் அனைத்து வட - கீழ், மலையக, தென் மேல் சிவ மண்டலங்களை உள்ளடங்கிய மட்டு- அம்பாறை, திருகோணமலை, வன்னி, யாழ் - கிளிநொச்சி, நுவரெலியா, பதுளை , கொழும்பு சிவப் பிராந்திய தலைவர்கள் உறுப்பினர்களின் ஒருங்கிணைப்பு கூட்டம் 2022 மார்கழி மாதம் வவுனியா கோவிற்குளம் சிவன் கோவிலில் நடைபெற்று தமிழ்ச் சைவப் பேரவையின் எதிர்கால வேலைத்திட்டங்கள் முன்னுரிமைப் பட்டியலில் இறுதி செய்யப்பட்டது.





இவ்வருடம்2022 பங்குனி உத்திரத் தன்று மலையகத்தில் தமிழ்ச் சைவப் பேரவையின் பங்கேற்போடு திருநாவுக்கரசர் ஆதீனம் அங்கு ரார்ப்பணம் செய்யப் பட்டதோடு அறநெறி ஆசிரியர்கள் உள் ளடங்கிய சிவமங்கையருக்கான கருத்தரங்கும் இடம் பெற்றது தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர்அடிகளார் , மெய்கண்டார் ஆதீனம் தவத்தரு உமாபதி சிவம் அடிகளார் திருமுன்னிலையில் தவத்திரு திருஞான சோதி அடிகளார்திருநாவுக்கரசர்ஆதீனமாக திருநாவுக்கரசர் ஆதீனமாக நுவரெலியா இலங்காதீசுவரர் சிவாலய காயத்திரி பீடத்தில் அருளாட்சி ஏற்றார்.குரு முதல்வர்கள் தமிழ்ச் சைவப் பேரவையின் வட -கீழ், மலையக குருபீடாதிகளாக பணிகளை ஆசீர்வதிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி சைவம் (தொல்தமிழர் கண்ட சிவநெறி) – I

- சிவநந்தி -

## சிந்துவெளி நாகரிகத்தில் தமிழும் சிவமும்

தமிழ் தொல்குடிகளின் அறியப்பட்ட நாகரிகங்களில் பழைமையானதாக (குறைந்தது 5000 ஆண்டுகளிற்கு முற்பட்ட ) கருதப்படும் சிந்து வெளியில் முந்து சிவனின் உருவமும் சைவ சித்தாந்த எண்ணக்கருவை விளக்கும் பசுபதி படிமங்களும் நடுகல்& சிவலிங்க வழிபாட்டு சான்றாதாரங்களும் தொல்லியல் ஆய்வில் கண்டறியப்பட்டு பன்னாட்டு அகழ்வாராட்சி நிபுணர்களால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

## முதனூல் திருமந்திரம்

இறை சிவனால் திருவாய் மலர்ந்தருளப்பட்டு நந்திதேவருடாக ஊடாக திருமூலருக்கு அருளப்பட்டு செந்தமிழ் ஆகமம் திருமந்திரம் தோற்றுவிக்கப்பட்டது.

கடல்கோள்கள், அந்நிய அழிப்புக்கள் என்பவற்றால் மணிவாசகர் கூறும் மன்னு மகேந்திர மலையில் தோற்றுவிக்கப்பட்ட பண்டைத் தமிழாகமங்கள் அழிந்து போக இன்று எமக்கு கிடைத்துள்ள சைவத்தமிழ் நூல்களில் மிகவும் பழமையானது திருமந்திரம் ஆகும்.

இற்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளிற்கு முன் சித்தர் பெருமகனான திருமூலர் செம்பொருள் துணிபாம் சிவபெருமானின் பேரருள் திறத்தை போற்றும் வகையில் கடவுள் வாழ்த்தாக “ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்” முதற் செய்யுளை நாலடியாக படைத்தார். இவரது சமகாலத்தவர் அகத்தியம் எனும் முதல் தமிழ் இலக்கண நூல் தந்த சித்தர் அகத்தியர் பெருமான்.

இந்த புனித நூலிலேயே சைவசித்தாந்தம் எனும் சொல்லாடல்கள் முதன் முதலில் கையாளப்பட்டுள்ளதுடன் அந்த உயரிய முடிந்த முடிபான தத்துவத்தின் இறை (பதி) உயிர் (பசு) தளை (பாசம் ) எனும் முப்பொருள் உண்மை விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இதன் விளக்கமாக பின்னாளில் சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோற்றம் பெற்று தமிழர் கண்ட உன்னத மெய்யியல் என உலகின் வேற்று மொழி, மத அறிஞர்களாலும் பாராட்டப் பெற்றது. ஆன்மீகமும் அறிவியலும் சந்திக்கின்ற பல புள்ளிகளை அன்றே சைவ சித்தாந்தம் தொட்டது. நவீன கூர்ப்புக் கொள்கையை, கரு உற்பத்தியை மிகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக திருமந்திரமும் திருவாசகமும் தெளிவாக அன்றே பதிவு செய்தன.

## வர்க்க பாலின சமத்துவமிக்க பக்தி இயக்கம்

அன்பே சிவம், ஒன்றே குலம் ஒருவனே தேவன் ீ யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் உன்னத சமவுடமை செல்நெறிகளை அன்றே உலகிற்கு தமிழர் கண்ட செந்நெறியான ஆதி சைவம் உலகிற்கு போதித்தது. அதனை பக்தி இயக்கமாக முன்னெடுத்து 63 நாயன்மார் வாழ்ந்து காட்டினர்.

இல்வாழ்விற்கும் பெண்களை சமமாக மதிக்கும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் என்ற சைவ சித்தாந்த கொள்கைக்கும் இடைக்காலத்தில் சமண, பௌத்த மதங்கள் சவால் விட்ட போது களப்பிரர்களுடைய ஆட்சியில் சைவத்தமிழ் பக்தி இயக்கத்தின் முன்னோடியாக காரைகால் அம்மையார் எழுந்தார். ஞான சம்பந்தருக்கும் அப்பருக்கும் முன்னதாக பதிகம் பாடும் மரபை அவர் தோற்றுவித்தார்.

## எளிமையான தாய்மொழி வழிபாடு

புண்ணியம் செய்வார்க்கு பூ உண்டு நீர் உண்டு
என்னை நன்றாக இறைவன் படைத்தளன்
தன்னை நன்றே தமிழ் செய்யுமாறே

என திருமூலரால் ஆகமம் வகுக்கப்பட்ட வழிபாட்டு நெறிகள் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது வரலாறு தரும் செய்தியாகும்.

சலம்பூவோடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் என முதற் பதிகத்திலேயே எளிமையான அனைவருக்கும் பொதுவான . திருக்கோவில் வழிபாட்டை பதிவு செய்த தொண்டின் தந்தை அப்பரடிகள் போதோடு நீர் சுமந்து ஏற்றி புகுவார் அவர் பின்னே சென்று கயிலைக் காட்சியை தென்னாட்டின் திருவையாற்றிலே கண்டவர்.

காதலாகி கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது நமசிவாய என்ற திருவெந்தெழுத்தே என அனைத்துச் சடங்குகளிலும் சிவ நாமத்தை மட்டும் முதன்மைபடுத்தினார். அத்துடன் நின்றுவிடாது மதங்கசூளாமணி அம்மையார், யாழ்பாணர் என பன்முகத்துவப்பட்ட அடியார்களையும் கருவறை வரை சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணோடு நற்றமிழ் பதிகம் பாடும் மரபை உறுதி செய்தார் ஆளுடைய பிள்ளையான ஞான சம்பந்தப் பெருமான்.

முதன் முதலாக அடியார் வரலாற்றுக்கு அடி எடுத்து கொடுத்துதில்லை வாழ் அந்தணருக்கும் திருநீலகண்டத்து குயவனாருக்கும் என அனைத்து சிவனடியார்களையும் ஒரே தராசில் சரிசமானமாக இறை சிவனை வழிபட முன் வணக்கம் செலுத்தினார் ஆதிசைவர் நம்பியாரூரர் எனும் சுந்தரமூர்த்தி நாயனார்.

சீலம், நோன்பு, செறிவு, அறிவு என நாற்பாதங்களில் உச்ச தொட்ட சன்மார்க்கமாம் நன்னெறியில் நின்ற மணிவாசகர் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை கண்ட பின்..... என தன்னலமற்ற அன்பின் வழி நின்ற கண்ணப்ப நாயனாரையே அனைத்து அடியவர்களிலும் உச்ச நிலையில் வைத்துக் காட்டுகின்றார்.

**தொண்டு (சரியை) நெறி, மகன்மை (கிரியை) நெறி, தோழமை (யோகம்) நெறி, காதன்மை (ஞானம்) நெறி** என எந்நெறி நின்றாலும் சிவனடியாரை சிவனாகவே போற்றும் சைவம் சமத்துவத்தின், அன்பின், தொல்சீர்மிகு பல்லோரும் ஏத்தும் தமிழர் கண்ட ஆதிசிவ நெறி என்றால் மிகையில்லை.

அன்பே சிவம்

**தென் நாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும்**
**இறைவா போற்றி**

*ஆதி சைவம் மலரும்.....*

**ஈழத்து தமிழ்ச் சைவ சமயிகள் குறித்து**
**விவேகானந்தர் உள்ளத்திலிருந்து**



இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமான தமிழாகும். மதமும் கலப்பற்ற தமிழ் மதமேயாகும். பல்லாயிரக் கணக்காண மக்கள் பரவசமாய் ஒருங்கே மறை நூலை ஓதுதலும் சிவனைப் பரவிப்பாடுதலும் ஆயிரக் கணக்கான தாள வாத்தி யங்களின் முழக்கமும் இனிய ஓசையும் சிறந்த அடியாரான அனுமனை ஒத்த தோற்றமும் சிவந்த கண்களும் உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழவதும் நீறுபூசி கழுத்திலே உருத்திராக்க மாலை களணிந்தும் மெய்மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றை நேரில் பாராமல் ஒருவாரால் புரிந்துகொள்ள இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன்

**"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றவன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே"**

-கடவுள் வாழ்த்து, பொதுப்பாயிரம், திருமந்திரம்.



கடவுள் என்றால் யார்? அவரைக் காணமுடியுமா?

மகன் கயூரனின் கேள்விக்கு எப்படி பதில் சொல்வது? என்று தெரியமால் முழித்துக் கொண்டிருந்தான் கயூரனின் தந்தையான சிவானந்தன்.

எத்தனை கடவுள்கள் உள்ளார்கள்? மீண்டும் கேள்வி வந்தது.

இறைவன் ஒருவன்தான் ஆனால் வேறு வேறு வடிவத்தில் நாம் விரும்பிய வடிவில் வழிபடுகின்றோம். ஒவ்வொரு தேசத்தவர்களும் வெவ்வேறு சமயங்களாக வேறு வேறான வடிவங்களில் வழிபடுகின்றனர்.

அதைத்தான் மாணிக்கவாசகர் **"தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"** என திருவாசகத்தில் பாடியுள்ளார். அதாவது தென்னாடு எனப்படும் கீழைத் தேசத்தின், பெரும்பாலான நாடுகளில் சிவன் என்று வணங்கப்படும் இறைவன் ஏனைய இடங்களில் வெவ்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றான்.

எங்கள் சமய சேர் இதைச் சொல்லவேயில்லை? என்றவாறு, கடவுள் பிழை செய்தால் தண்டிப்பாரா? யோசனையுடன் கேட்டான் மகன்.

சிவானந்தன் சிரித்துக் கொண்டான். பக்தியை பயத்தின் ஊடாக புகட்டியதன் விளைவு? இறைவனில் அன்பு, நம்பிக்கையை ஏற்படுத்துவதை விடுத்து, கடவுள் மீது பயத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

சிவபெருமான் அன்பே உருவானவன். அன்புதான் சிவனுக்கு முதன்மையானது. தூய்மையான தன்னலமற்ற அன்புக்கு மட்டும் கட்டுப்பட்டவர். அறியாமல் செய்யும் பிழைகளை மன்னித்தருள்வார். ஆனால் தெரிந்தே செய்யும் பிழைகளை, அப்பிழைகளை உணர்ந்து, திருத்திக் கொள்ளாவிடில் தண்டனையை நிச்சயம் தருவார். அதுவும் அவர்கள் மீது கொண்ட அன்பினால் அவர்களை மேன்மைப்படுத்தவே. அதனாலேதான் நாம் உயிர் களிடத்தில் அன்பு செலுத்துதல் வேண்டும் என்கின்றன ஒவ்வொரு மதங்களும்.

கடவுள் என்றால் யார் என்று சொல்லவில்லையே? தனது கேள்வியில் பிடிவாதமாக நின்றுகொண்டான் கயூரன்.

எங்களைப் படைத்து, காத்து, வீடுபேற்றைத் தருபவர் தான் கடவுள். எங்கும் எதிலும் அவன், அவள், அது என மூன்றாகவும் உள்ளவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது "கட" என்றால் எல்லாவற்றையும் கடந்து இருப்பவர். "வுள்" என்பது உள் என்பதாகும். அதாவது அவ் எல்லாவற்றினுள்ளும் இருப்பவர் என்பது பொருள் ஆகும். எனவே எங்களுக்குள்ளும் இருப்பவன். அன்புடன் இருந்தால் நாங்களும் கடவுளின் குணம் படைத்தவர்கள்தான்.

அன்பில்லாத இடத்து கடவுள் எங்களுக்குள் இருக்காது போய் விடுவார்.

இதைத்தான் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் **"நாற்றத்தின் நேரியாய், சேயாய் நணியானே"** என குறிப்பிட்டுள்ளார். அதாவது அன்புள்ளவர்களிடத்தில், பூவில் நறுமணம் இருப்பதுபோல் அவர்களுடன் சேர்ந்திருப்பவன் எனப் பாடியுள்ளார்.



எப்படியப்பா கடவுளை நாம் காணலாம்?

என்னடா இது? கடவுளிடம் மிக்சர் வேண்டாமல் விடமாட்டான் போலிருக்கிறதே! அன்புடன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு வழிகளிலும் இறைவனைக் காணலாம். அதற்கு நல்லோரின் நட்பும் நல்லதோர் குருவும் கிடைத்தால் இலகுவாக காணலாம்.

நல்லவர்கள் என்றால்?

தெரியலையே மகனே! அவர்களைத் தானே நானும் தேடிட்டு இருக்கின்றேன் என்று என்று சொல்லத்தான் நினைத்தான். வேண்டாம் நல்லவர்கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று சொல்லி விடுவோம் என்று நினைத்தவாறே,

**"அவனருளாலே அவன்தாள் வணங்கும்"** சந்தர்ப்பம் இவனுக்கு கிடைக்கட்டும் என்று சிவனை வேண்டி யவாறே, நல்லவர்கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று சந்திரமுகி பட வடிவேலு பாணியில் சொல்லத் தொடங்கினான்.

அறநெறியுடன் கூடிய அன்புடன் இருப்பார்கள். ஐம்புலன்களான கண், காது, வாய், மூக்கு, தோல் போன்றவற்றை அடக்கக் கூடியவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள்.

இவர்களால்தான், ஓர் அறிவு முதல் ஆறறிவு ஈறாகவுள்ள அனைத்துயிர்க்கும் தன்னை அறிவிக்க எழுத்து, சொல், மந்திரம், கலை, அண்டங்கள், தத்துவம் என ஆறு பிரிவுகளாக விரிந்து நிற்கும் சிவனை உணரமுடியும்.

இவ்வாறு உணர்ந்தால், ஏழு பிறப்புக்களுக்கும் அப்பால் சென்று மீண்டும் மீண்டும் பிறப்பின்றி அவனை இறைவனின் திருவடிகளை எட்டிப்பிடித்துக்கொள்ள முடியும்.

கயூரன் ஒருமாதிரியாகப் அப்பாவைப் பார்த்தான். நீங்க ஏதோ சொல்ல வாறீங்க, எனக்கு விளங்கவில்லை என்றவாறு சென்றான்.

"பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் " பாடசாலையின் காலை வழிபாட்டில் பாடிய சிவபுராணத்தில் இன்று ஏதோ இருப்பதை உணர்ந்தான் கயூரன்.

**மருத்துவர் தி.சுதர்மன்**

பொதுச்செயலாளர், தமிழ்ச் சைவப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் காத்த மாதரசிகள்

**சிவச்செல்வி கு.சோதிநாயகி**
தலைவி, சிவமங்கையர் அமைப்பு

பெண்மைக்கு சரிபாதி தந்த இறையை பரம்பொருளாக போற்றும் சைவநெறி இடர்மிகுந்த தமிழகத்தின் இருண்ட அந்நிய மதமாற்ற காலத்திலிருந்து மீண்டெழுந்து வருவதில் பெரும் பங்காற்றிய பெருமை மூன்று மாதரசிகளைச் சாரும். திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகியோரே சைவ உலகு போற்றும் சிவ பக்தியில் உச்சந்தொட்டு சைவ மறுமலர்ச்சிக்கு பக்தி இயக்ககாலத்தில் வித்திட்ட உன்னத மாதரசிகளாவர்.

## காரைக்கால் அம்மையார்




புனிதவதியார் என்ற இயற் பெயருடைய காரைகால் அம்மையார் தேவார முதலிகளிற்கு முற்பட்டவர். தோத்திர பதிகங்கள் பாடும் மரபை முதலில் தோற்றுவித்தவர் என கொள்ளப்படுகின்றார்.அந்தாதி முறையில் பதிகம் பாடும் முறையும் இவராலேயே தொடக்கப் பட்டது. சிவபெருமானால் அம்மையே என அழைக்கும் பேறு பெற்ற அம்மையார் இறவாத இன்ப அன்பு வேண்டி அற்புத திருவந்தாதி, திருவிரட்டை மணி மாலை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் எனும் பதிகங்களைப் பாடி இசைத்தமிழால் இறை சிவனைப் பாடிப் பரவும் பக்தி இயக்கத்தை ஆரம்பித்த முன்னோடியாவார்.

திருவள்ளுவருக்கு பின் 3ம் - 5ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியே அம்மையார் வாழ்ந்த காலப்பகுதி ஆகும்.தமிழகத்தின் காரைக்காலில் உள்ள சிவாலயத்தில் அம்மையாருக்கு தனி சந்நிதி உண்டு.பக்தி வைராக்கியத்திற்கு மங்கையராய் பிறந்த அனைவரும் பின்பற்ற வேண்டிய உன்னத மாதரசிகாரைக்கால் அம்மையார் என்றால் அது மிகையில்லை.

– மலரும் –

**மண்ணில் இனிய இல்லறத்திற்கு
சிவசக்தி வாழ்வை எடுத்துகாட்டும்
ஞானசம்பந்தர்
மண்ணில் நல்லவண்ணம்
வாழலாம்வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர்
குறைவிலை
கண்ணில் நல்ல:ஃதுறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சித்தர்கள்

சிவபூமியென சித்தர் பெருமான் திருமூலரால் அழைக்கப்பெற்றது எமது ஈழவளநாடு. பஞ்ச ஈஸ்வரங்கள் உட்பட பல சிவாலயங்களைக் கொண்ட புண்ணியபூமி நம்நாடு. பல்லாயிரம் ஆண்டுகளாக சித்தத்தை சிவன்பால் வைத்து தன்னையறிந்த சித்தர்கள் உலாவிய நாடு. இந்த சித்தர்களின் வரலாற்றுப் பதிவுகள் இல்லாது போயினும் கடந்த நூற்றாண்டு தொடக்கம் ஈழத்தில் சஞ்சரித்த சித்தர்களின் வரலாறுகளை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. இந்த வகையில் ஈழத்துச் சித்தர் பரம்பரையின் மூலகுரு என போற்றப்படும் கடையிற் சுவாமிகள் பல சித்தர் மரபுகளை எம்மண்ணிலே தோற்றுவித்துள்ளார். கடையிற் சுவாமிகளைத் தொடர்ந்து செல்லப்பா சுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், பெரியானைக்குட்டி சுவாமிகள், செல்லாச்சி அம்மா, சடையம்மா, யோகர் சுவாமிகள், கந்தையா சுவாமிகள்(குடைச் சுவாமிகள்), நயினாதீவு சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் எனப்பல சித்தர்கள் ஆத்மசாதனை செய்து பரசிவத்தை தம்முள் உணர்ந்து எந்தவித வெளிவேசமும் காட்டாமல் இறை உணர்வுடன் அடியவர்களை ஆற்றுப்படுத்தி வந்துள்ளார்கள்.

ஈழத்து சைவர்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர்கள் சிவஞானம் பெற்ற இச் சித்தர்களின் வாழ்க்கை வரலாற்றினை அறிந்து பயன்பெற வேண்டும் எனும் நோக்கில் ஈழத்துச் சித்தர்கள் எனும் தலைப்பில் சைவமுரசு இதழில் ஒவ்வொரு ஈழத்துச் சித்தரின் வாழ்க்கை வரலாற்றினை பகிர்வதற்கு திருவருள் கைகூடியுள்ளது. அடுத்த இதழில் கடையிற் சுவாமிகளின் வரலாறு பற்றி அறிவோம்.

**அன்புடன்**
**ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்.**

**என்னையெனக் கறிவித்தானெங்கள் குருநாதன்**



**என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்**
**இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்**
**அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்**
**அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்**
**முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்**
**மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்**
**நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்**
**நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்**

- சிவயோகர் சுவாமிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ அறப்பணி நிதிய பதிவுகள்

தமிழ்ச் சைவப் பேரவை வழிகாட்டலிலே பல சைவ அமைப்புக்கள் ஒன்றிணைந்து சைவ அறப்பணி நிதியத்தை வலுப்படுத்தி, எம் தேசத்து குழந்தைகளின் கல்வியில், நலிவுற்ற மக்களின் வாழ்வியல் மேம்பாட்டில், அற்றார் அழி பசி தீர்க்கும் செயற்பாடுகளில், குழந்தைகள் கர்ப்பவதிகளின் சத்துணவு திட்டத்தில், இயற்கை விவசாய வீட்டுத் தோட்ட ஊக்குவிப்புக்களில், மரம்



தமிழ்ச் சைவப் பேரவையில் அங்கத்துவம் பெற்றுள்ள அகில இலங்கை சைவ மகா சபை, சிவத்தமிழ் மானிட விடியற் கழகம், சிவப்பிராந்தியங்களின் சிவதொண்டர், சிவமங்கையார் அமைப்புகள், அம்பாறை சைவநெறிக் கூடம், கிளிநொச்சி திருநெறிக் கழகம், மடு சைவப் பேரவை என்பவை இந்த செயற்றிடத்தில் இணைந்து செயலாற்றி வருகின்றன. உறுப்பினர்களும் அறக் கொடையாளர்களும் இதற்கு தவணை அடிப்படையிலும் தமது விசேட வைபவங்களை ஒட்டி



அதனூடாக கடந்த கால
க.பொ.த.உயர் தர
மாணவர்களை யாழில்
மாணவர்களில் பல்க
கல்லூரிகளுற்கு அனுப்பி
தடவை தோற்றும் ஒரு தெ
தங்குமிட உணவு கல்
வழங்கி வருவதும் விசேட
பிரத்தியேக கல்வியை
விஞ்ஞான ஆசிரியர்கள்
நன்றியறிதலுடன் சுட்டி கா

ஜெயவர்த்தனபுர பல்கலை
பழைய மாணவர் தொடர்
சத்துணவுத் திட்டத்துற்கு
காலங்களில் மாங்
மாணவர்களின் மதிய
தற்போது வன்னி சிறார்
வழங்கும் செயற்திட்டத்தி
பங்களிப்பு பயன்படுத்தப்ப



இப் பணிகளுடன் அறக்
பணிகளில் சைவ சமயிக
உதவிகள் எந்த வித இ
தேவைப்பாடுகளின் மு
இருக்கும் வளங்கள்
உறவுகளுற்கு பகிர்ந்தளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் மலையக சிறார்களை
தர கணித, விஞ்ஞான பிரிவு
ாழில் வைத்து கல்வி கற்பித்து 15
பல்கலைக் கழகம், கல்வியியற்
னுப்பி வைத்தமையும் தற்போது 2ம்
ஒரு தொகுதி வன்னி மாணவர்களுற்கு
கல்வி கற்றல் வசதிகளை யாழில்
விசேட அம்சமாகும். இவர்களுற்கான
யை தனியார் முன்னணி கணித
ர்கள் இலவசமாக வழங்கி வருவது
ட்டி காட்ட வேண்டிய விடயமாகும்.

ல்கலைக்கழக லண்டனில் வதியும்
தாடர்ச்சியாக வன்னி மாணவர்களின்
துற்கு உதவி வருகின்றனர். கடந்த
ாங்குளம் மகா வித்தியாலய
திய போசன உதவித் திட்டத்திலும்
சிறார் ,தாய்மார் போசாக்கு சத்து மா
டத்திலும் இவர்களின் அறக்கொடை
ந்தப்பட்டு வருகின்றது



அறக்கொடை கள நிலை இணைப்பு
மயிகளான நீங்களும் பங்கேற்கலாம்.
இன, மத பிரதேச வேறுபாடுமின்றி
முன்னுரிமை மற்றும் எம்மிடம்
கள் அடிப்படையில் எம் தேசத்து
ந்தளிக்கப்படும்.

மேலதிகமாக இறுதியாக முக்கியமான அன்புக் கொடையாக அனைத்து குழந்தைகளையும் குடும்பங்களையும் அறம் செய்ய தூண்டும் நடவடிக்கையாக பிடியரிசி சேகரித்து தேவைப்பாடுடைய குடும்பங்களுற்கு வழங்கும் அறப்பணி செயற்றிட்டம் கடந்த மார்கழி மாதம் முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது எனும் "யாவார்க்குமாம் உண்ணும் போது ஒரு கைபிடி" கொடுக்கும் செயற்பாட்டையும் உங்கள் சிந்தைக்கு சமர்ப்பிக்கின்றோம்.



படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே

**சைவ அறப்பணி நீதிய வங்கி கணக்கு விபரம்**
சைவ அறப்பணி நிதியம்
(Saiva Arappani Nithiyam)
**கணக்கு இல. 80135813**
இலங்கை வங்கி
வட்டுக்கோட்டை

சைவ அறப்பணி நிதிய தொடர்புகளுற்கு
**தலைவர்**
சிவத்திரு. நா சண்முகரத்தினம்
077 0362286
**பொருளாளர்**
திரு. அருள் சிவானந்தன்
0778999822
**அலுவலக காரியதரிசி**
077 0756333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தம் - தொன்மமும் இருப்பும்

- எந்திரி வே.சனாதனன்-

தமிழர்களின் அடி நாதம்என்று சொல்லக்கூடிய சைவசித்தாந்தம் எனும் மெய்யியல் மரபு வெறுமனே சொல்லாடலாகவோ ஒரு மதமாகவோ கருதப்படமுடியாததாகும். அதனால்தான் போலும் தென் வேர் எங்கு தொடங்குகிறது எனும் மூல ஆராய்ச்சி மனிதனின் நாகரீகம் ஆரம்பித்ததோடு போய் நின்றுவிடுகிறது. வரலாற்று ஆராய்ச்சிப்பக்கங்களை புரட்டும்போது மானுட நாகரிகமானது மெஹெஞ்சதாரோ (இன்றைய பாகிஸ்தான்) என்கிற இடத்தில் தனது எச்சங்களை விட்டுச் சென்றிருக்கின்றது என்பதும் அந்தக் காலத்திலயே தகவல் சேமிப்பு, மற்றும் பரிமாற்றம் போன்ற செயற்பாடுகளுக்காக விளக்கப்படங்கள் (சின்னங்கள்) பயன்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகின்றது. (எ.கா.பசுபதி சின்னம், ஹரப்பா காலம், கிமு 2,300-1750) உலகின் மூத்த நாகரிகம் ஒன்று தனது மொழியை வளர்த்து பின் அதனை தகவல் பரிவர்த்தனைக்காக பயன்படுத்தி, தன் பின்னால் வரும் சந்ததியினருக்கு கடத்துவதற்காக இவ்வாறான எச்சங்களை விட்டுச்சென்றிருக்கிறது என்பது இதன்மூலம் திண்ணமாகின்றது.

இங்கு பயன்பட்ட **"பசுபதி"** என்கிற சொல்லாடல்தான் உலகின் மூத்த நாகரிகத்தின் சொல்லாடல் என்பதும் அதன் வேர்ச்சொற்களாகிய பசு, பதி என்பன வேறெந்த மரபிலும் பயன்பட முன்னமே தமிழர்களின் சைவசித்தாந்தத்தில் "முப்பொருள்" விளக்கத்தில் தெளிவான வரையறைகளோடு பயன்பட்டிருந்தன என்பதையும் காணும்போது சந்தேகங்களுக்கு இடமின்றி சைவசித்தாந்தாத்தின் தொன்மம் தெரியவருகின்றது. பசு என்பது ஆன்மா என்றும், பதி என்பது தலைவன் என்றும், பசுபதி என்ற சொல் பல்வேறு ஆன்மாக்களின் தலைவன் என்றும் தமிழர்களின் மெய்யியல் கோட்பாட்டு நூல்களிலும் கையாளப்பட்டருக்கின்றது.

வரலாற்றாய்வாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட் இந்த பசுபதி சின்னத்தில், சம்மணம் போட்டு அமர்ந்திருக்கும் அந்த பசுபதியின் உருவத்தில் திரிசூலம் போன்ற சடாமுடி அமைப்பும், அந்த உருவத்தை நோக்கிய வண்ணம் காண்டாமிருகம் முதலான பல்வேறு விலங்குகள் சூழநிற்கும் அந்த காட்சியும் இன்னமும் ஆராய்ச்சிக்குட்பட்டுள்ளது. பசுபதிக்கும் அவரை சூழநிற்கும் விலங்குகளுக்கும் இடையில் இருக்கும் உறவுதான் பாசம் (அல்லது தளை) என்கிற கருத்தோடு எமது சைவசித்தாந்தக் கொள்கைகளும் ஒத்துநிக்கின்றன எனும் அடிப்படையோடு இந்த முன்னோட்டம் ஆரம்பிக்கிறது. இது இவ்வாறிருக்க, தற்போதுள்ள விஞ்ஞானமும் சைவசித்தாந்தமும் என்கிற மெய்யியலும் எவ்வாறு தொடர்புபட்டு மேலோங்கியும் நிற்கின்றது என்கிற விளக்கமும் நமக்கு அவசியமாகின்றது. இதன் மூலம் மட்டுமே சைவசித்தாந்தத்தின் அழியாத்தன்மை (முடிவில் தன்மை) எமக்கு தெளிவு பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அழியாத்தன்மைதான் "மெய்" என்றும் உள்மெய் (உண்மை) கொள்ளப்படுகின்றது. எனவே உண்மைத்தன்மையை தத்துவார்த்த சிந்தனை ஆராய்ச்சிகளினூடு பிறந்ததாகிய சித்தாந்தம் என்பது "முடிந்த முடிவு" எனப்பெயர் கொண்டு நிற்கின்றது. மேலும் இந்த முடிவுகள் பதியாக அடையாளம் கொள்ளப்பட்ட சைவர்களின் முழுமுதற்கடவுளாகிய சிவனை சார்ந்து நின்று பொருள்தருவதால் சைவம் என்கிற முன்னொட்டு தரித்துப்பின் "சைவசித்தாந்தம்" என்று வழங்கப் பெறலாயிற்று. இன்றைய விஞ்ஞானத்தால் இதுவரையில் பொருள் எனும் பதத்தை சரியாக வரையறுக்க முடியவில்லை. இதுவரயையில் அது ஒரு சடம் என்கிற பர்வையைத்தான் விஞ்ஞானம் கொண்டிருக்கின்றது. ஆனால் நாகரிகத்தின் தோற்றுவாயிலேயே ஒரு மானூட சமுதாயம் "பொருள்" என்கிற சொல்லாடலை முன்வைத்து அதனுள் அறிவு, உணர்வு, போன்ற பல்வேறு தொடுகையுணர்வுகள் தாண்டிய கருத்துக்களையும் (Concepts) உள்ளடக்கியிருந்தது என்று சொன்னால் நம்ப முடிக்கின்றதா? எடுத்துக்காட்டுக்கு, மனம் விஞ்ஞானம் இன்னமும் விளங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கின்றது.

ஆனால் சைவசித்தாந்தத்தில் மனம் என்பது ஒருபொருளாக அறியப்பட்டு, அதன் தோற்றம், இயக்கம், செயற்பாடுகள் என்பன எவ்வாறு ஒரு பொறிமுறைக் குட்படுத்தப்பட்டுள்ளன என்று அங்கங்களாக விளக்கப் பட்டிருக்கின்றது. இவ்வாறு, விஞ்ஞானம் எட்டமுடியாத கருத்துக்களை தன்னகத்தே அடக்கி, சரியான கட்டமைப்புடன் தத்துவார்த்தரீதியாக வெவ்வேறு கருத்துக்களையும் அவற்றின் எல்லைகளையும் வரையறுத்து நிற்றலாலேயே சைவசித்தாந்தம் விஞ்ஞானத்தையும் விஞ்சிநிற்கின்றது என்கிற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. அதன் இறவாத்தன்மையும் புலப்படுகின்றது. இங்கு விஞ்ஞானத்தை சாடுவது இக்கட்டுரையின் நோக்கமன்று, மாறாக சைவசித்தாந்தத்தின் தொன்மையையும் நீடித்த இருப்பையும் அளவு கோலிடவேண்டியதால் இன்னொன்றோடு ஒப்பிட வேண்டியுள்ளது.

இவ்வாறான உட்கருத்துக்கள் ஒருபுறமிருக்க, தத்துவார்த்த ரீதியாக சைவசித்தாந்தத்தை இலகுவில் கற்றல் எவ்வாறு என்பது தொடர்பில் பலரும் பல்லோறு வழிமுறைகளை கையாண்டு உள்ளனர். அவற்றை எளிதில் புரிந்து கொள்வது என்பது தனிநபர்களின் நாட்டத்தில் தங்கி உள்ளது. இதன் முதற்படியாக, முப்பொருள்கள் எனப்படும் பதி, பசு மற்றும் பாசம் என்கிற தத்துவக்கருத்துக்களை (principle concepts) அறிந்து விளக்கிக்கொள்தல் அவசிமாகின்றது. ஒருசில தத்துவார்த்த சிந்தனைகளில் கூறப்பட்டுள்ளது போல சைவசித்தாந்தம் எந்த ஒன்றையும் பொய் என்று கருதவில்லை. நம்கண்முன்னே நடக்கும் காரியங்களை நம்மால் அறிந்து, கேட்டு, பார்த்து, உணர்வதை எவ்வாறு பொய் என்று வரையறுக்க முடியும்? அதற்காக, மாற்றுக்கருத்துக்களை முழுமையாக மறுக்காமல் தர்க்கரீதியில் வேறு மதச்சிந்தனைகள் எவ்வாறு கருத்துக்களை

– தொடரும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் திருமந்திரம்

மருத்துவர். பரா.நந்தகுமார்



தமிழர்களிடைய தாய் மதமாக மட்டுமல்லாது உலகின் தாய் மதமாக உள்ள சைவத்தின் சாரமாக தத்துவார்த்த மெய்யிலாக தமிழர் கண்ட இறை ஆகமமாக விளங்கும் முதனூல் திருமந்திரம் ஆகும். சைவ சித்தாந்த மெய்யியலை முதலில் எடுத்துரைத்த உலகின் முதனூலாக சேக்கிழார் பெரிய புராணத்தின் படி நாம் கொள்ளலாம்.இன்றைய விஞ்ஞானம் சில நூறாண்டுகளிற்கு முன் கூறியவற்றை ஆயிரம் வருடங்களை கடந்து நின்ற திருமூலரின் திருமந்திரம் தெள்ளத் தெளிவாக கோடிட்டு காட்டி விட்டது

வடக்கே ஓர் ஆநிரை மேய்த இடையரான கண்ணன் கீதை தந்து அது இந்திய உப கண்ட மதங்களிற்கு எல்லாம் பொது நூலாக பிரச்சாரப் படுத்தப் படுகின்ற நிலையில் தெற்கே ஆநிரைகளான பசுக்களின் மீது அன்பை பொழிந்த இன்னோர் இடையன் மூலன் உலகின் மூத்த மொழியாகவும் பக்தி மொழியாகவும் உள்ள தமிழில் இறை ஆகமம் தந்ததில் வியப்பொன்றும் இல்லையே. பொதுத்தளத்தில் எல்லாவித பக்கசார்புகளையும் ஓரம் கட்டி விட்டு மனதின் கண் மாசிலானாய் நடுவு நின்று ஆராயும் எவரும் திருமந்திரத்தின் தனித்துவத்தையும் நிறுவக்கூடிய எடுகோள்களுடன் கூடிய முதலாவது தத்துவார்த்த மெய்யியலாக விளங்கு கூடிய இறையியல் நூல் (சாத்திர நூல்) திருமந்திரம் என்பதை முழு மனதோடு ஏற்றுக் கொள்வர்.தனியே உச்சமான உன்னதங்களைத் தொட்ட இறையியல் தத்துவம் என்பதை தாண்டி மானிடவியலின் அதி சிறந்த கருத்தாழமிக்க மந்திர சொற்றொடர்களை கொண்டு திருமந்திர செய்யுள்களை ஆர்த்திருக்கின்றார் திருமூலர் எனும் நம் தமிழ் சித்தர்.

அன்பே சிவம், ஒன்றே குலம் , உள்ளம் பெருங்கோயில், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எத்துணை மனிதத்தின் உச்சந் தொட்ட சொற்கள்.இவை போன்று அருமையான அற்புதமான சைவத்தமிழ் மனத்தின் பரந்து விரிந்த சால்பை காட்டும் சொற்றொடர்கள் 3000 திருமந்திரம் முழுவதும் கொட்டிகிடக்கின்றது. கோடுகள் போட்டு மனிதர்களை வேறு பிரித்து வர்க்க ஆண் பெண் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்க பல நூல்கள் முயன்ற போது அவற்றுக் கெல்லாம் சாட்டி அடி கொடுத்தார் இறை சிவனாகிய நந்தி அருள் பெற்ற திருமூல நாயனார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63 தமிழ் நாயன்மாரிலும் 18 தமிழ் சித்தர்களிலும் இடம் பிடித்த ஒரே ஒருவரான பன்னிரு திருமுறைகளில் 11 தோத்திர நூல்களாக இருக்க சாத்திர (இறையியல் கோட்பாட்டு) நூலாக திருமந்திரத்தை தந்தார் திருமூலர்.அறத்தை, பொருளை, இன்பத்தை, வீட்டை நால்வகை வாழ்வியல் தரிசனங்களையும் தொட்டு மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் சிவனடி நிழலில் பேரின்பம் துய்ப்பதற்கும் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டி நிற்கும் சிவானுபத் தேனாகிய திருமந்திரத்தை சுவைக்க சுவைத்த மந்திரங்களை யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் எனும் ஒப்புயர்வற்ற திருமூலரின் சிந்தையோடு உலக மாந்தர் யாவும் பருக வைக்க அதன் வழி ஒழுக அனைத்து சைவத் தமிழ் உறவுகளையும் குறிப்பாக இளைய தம்பி தங்கையரை அன்போடு அழைக்கின்றோம்.

**திருமூலர் தம் வரலாறு கூறும் திருமந்திரங்கள் சில சைவ சித்தாந்த கழக வெளியீட்டின் சித்தாந்த பண்டிதர் ப. இராமநாதபிள்ளையின் பொருள் உரையுடன் தரப்படுகின்றது**

***அங்கிமி காமைவைத் தானுடல் வைத்தான்***
***எங்குமி காமைவைத் தானுல கேழையும்***
***தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்***
***பொங்கிமி காமைவைத் தான்பொருள் தானுமே.***

ஆருயிரின் உடலகத்து உணவினைச் செரிக்கத் தக்கவாறு அகட்டுத்தீ அமைத்தனன். அத் தீயினை அவ்வளவுக்கு மேல் மிகாமலிருப்பதும் அவன் திருவாணையே அதுபோல் கடலகத்தும் அது காலமல்லாக் காலத்தும் பொங்கி மிகுந்து உலகத்தை அழித்து விடாதபடி ஒரு தீயினை அமைத்தனன். அதனால் ஏழுலகமும் கேடின்றி நிலைபெறுவவாயின. அதுபோல் உலகத்தின் கண் ஆணவவல்லிருள் மிகுந்து ஆருயிர்களின் அறிவைத் தடைப்படுத்தி பிறப்புக்கு ஆளாக்ககும் தன்மை மிகாமைப் பொருட்டுத் தமிழ்த் திருமறையும் திருமுறையும் முறையே புகழ்நூல் பொருள்நூல் வகையான் அமைத்தருளினன் திருமுறை. நால்வர் முதலிகள் முதலாயினர் அருளிய பதினொரு திருமுறைகள் திருமுறை. திருமூலர் சொல்லாகிய தமிழாகமமும் மெய்கண்ட நூல்களும். இங்ஙனம் அமைத்தருளினவன் மெய்ப்பொருளாகிய சிவன் என்க.

***பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்***
***கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க***
***பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்***
***அண்டமுதலான் அறஞ்சொன்னவாறே.***

கற்பன கற்றுத் திருவருள் துணையால் பொற்புற நிற்பார் புலவர் எனப்படுவார். தம்மை ஐந்து புலனும் பின்செல்லும் தகையரா்கிய நல்லொழுக்கினர் புலவர். அப்புலவரே பண்டிதர் எனப்படுவார். பண்டைக்காலத்து மொழிகளுள் துணையாந்தன்மை வாய்ந்த மொழி பதினெட்டு பதினெட்டு மொழிக்கண்ணும் கூறப்படும் பொருட்கருத்தினை உள்ளவாறு ணர்வார். பண்டிதரென்க அப்பதினெட்டு மொழிகளையும் தக்கார் வாயிலாக அருளிச் செய்தவன் அனைத்தண்டங்கட்கும் முதல்வனாய் விளங்கும் அரன் என்னும் திருப்பெயரினை உடைய சிவபெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னைநின் றென்னேபிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவஞ் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.**

அயல் வழக்கின் துறைவெல்லும் அசைவில் செந்தமிழ் வழக்கே திருவடியுணர்வைக் கூட்டுவிக்கும் அருள் வழக்காகும். அத்தமிழ் வழங்கும் நாடே சிவனடி சேர்ப்பிக்கும் நற்றவம் புரிதற்கேற்ற பழ நாடாகும். இந் நாட்டகத்துத் தோன்றி முன்னமே நன்னெறி நான்மை நற்றவத்தினை முயன்று செய்கிலாதவர். பின்னும் பிறப்பெடுத்துத் துன்புறுவர் என்னே அவர்தம் பேதைமை சிவபெருமான் என்னை நன்றாகப் படைத்தருளினன் தன்னை ஏனையார் திரிபின்றி உள்ளவாறு உணர்ந்து உய்தற்குக் கருவியாகிய செந்தமிழ்த் திருமுறையினை ஓதி வழிபடுதல் வேண்டும் எனத் திருவுள்ளங் கொண்டனன் சிவன் அத்தகைய தமிழ் அருள் நூலை அடியேனைக் கொண்டு பாடுவிக்கவும் எண்ணினன். அங்ஙனமே என்னைத் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு இருத்தியருளினன் தமிழ் பரப்பியவர் ஆளுடைய பிள்ளையார்: தமிழ் உகந்தவர் சிவபெருமான்.

**பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற**
**தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்து**
**அற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்**
**நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே.**


பெற்றமாகிய ஆனேறும் மானும் மழுவும் பூண்டது திருவருனோடும் ஆருயிரோடும் அனைத்துருளோடும் பிரிவற்றுப் பின்னலாய் நின்றருளும் சிவபெருமானின் திருவாணையாகும். தற்பரன் - தானே முழு முதலாய் நிற்கும் சிவன் கற்பனை - கட்டளை, திருவாணை ஆனேறு அறத்தின் குறிப்பாகும். மான், செந்தமிழ் மறை முறைகளின் குறிப்பாகும். மழு, திருவானையின் குறிப்பாகும். இம் மூன்றும் ஒருபுடையாக உள்ளம் உரை உடல் எனக் கொள்ளலுமாம் மேலும் இவை திருவடிதலைக் கூட்டும் அறமும், அவ்வறத்தினை அறிவூட்டும் செறிதமிழ்மறை முறையாகிய மெய்ந்நூலும், அந்நூலின் வழி ஒழுகுவதற்கு உறுதுணையாகிய படைப்பு காப்பு துடைப்பு ஆகிய முத்தொழில் ஆணையும் குறிப்பனவாகும் மழுவாகிய முத்தலைவேல் மேற்குறித்த திருவாணைக் குறிப்பேயாகும். இதனால், அறத்தைச் செலுத்துபவனும் மறையின் ஒலிக்குள் ஒலியாய் நிற்பவனும், அயன் அரி அரன் என்னும் மூவர்க்கும் திருவானை அருள்பவனும் சிவனே என்பது தெளிவாகும். இயங்குதிணை நிலத்திணை என்னும் இரு வேறுயிர்களின் மெயம்மையினையும் உணர்த்தியருளினன். அடியேன் முடியின்மீது தன் திருவடியினையும் சூட்டியருளினன் அவன் எங்கள் நந்திக் கடவுளாகிய சிவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வாழ்க்கை

சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார்



நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும்போது நம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும்போது அது கிடைக்குமாயின் இன்புறுகிறோம். அன்றியும் நாம் விரும்ப மாட்டாத ஒன்று நம்மைச் சேரா விட்டாலும் நாம் இன்புறுகிறோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோஷப்படுகிறான்.

இப்படியின்றி நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகிறது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகிறது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகின்றது. ஏதாயினும் இடர்வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக் காயினும், கோபத்துக்காயிம், அச்சத்துக்காயினும், இடர்வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும், கரியதாகிய காகமும், பச்சையாகவே தோன்றும். அதுபோலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால் யாவும் உவப்பானவைகளாகவே தோன்றும். நான விரும்பிய பொருள் கிடையாதுவிட்டால் துன்பமில்லை. எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்துபோம் என்று அஞ்சுவதில்லை. என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்த தில்லை.

சைவசமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கிறோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவபெருமான்: ஆதலால் அவருக்கு **"வைத்தியநாதன்"** என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு. ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான். அதுபோல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு. வைத்திய நாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்குக் கிடையாவிடின் அது நமக்கு ஆகாதென்று உணர்ந்து அது கிடையமாற் போனதைப்பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான். ஆமணக் கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான் அதுபோல, சிவபிரானாகிய வைத்தியநாதர் நாம் விரும்ப மாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால் நம் முயற்சிகளைக் கடந்து நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றி இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போவதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறிய வேண்டியதில்லை. "யாவும் அவருடைய செயலே: அவர் செய்வதெல்லாம் நன்மையே" என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால் அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி,

*"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்*
*நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோமம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்ப மில்லை*
*தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனற்*
*சங்கவெண் குழை யோர் காதிற்*
*கோமாற்கே யாம் என்றும் மீளா வாளாய்க்*
*கொய்ம் மலர்ச்சே வடியினையே குறுகி னோமே"*

*கண்ணவெண் சந்தனச் சாந்தும்*
*சுடர்திங்கட் சூளாமணியும்*
*வண்ண உரிவை உடையும்*
*வளரும் பவள நிறமும்*
*அண்ண லரண்முரண் ஏறும்*
*அகலம் வளாய அரவும்*
*திண்ணன் கெடிலப் புனலும்*
*உடையா ரொருவர் தமர்நாம்*
*அஞ்சுவ தியாதொன்று மில்லை*
*அஞ்ச வரவது மில்லை"*

(தேவாரம்)

என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம். துக்கம், கோபம். அச்சம் மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெருமுயற்சி செய்து பொருளைத் தேடி நட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர் செய்ய வரும்போது கோபம் கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும் குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்து போனால் "பிறந்தவர் இறப்பது திண்ணம்" என்பதைக் கண்டு மனங்கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத் தக்கவைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம்

**திரு. அருள்.சிவானந்தன்**
பொருளாளர், சைவ மகாசபை

மனித உயிரினங்கள் வாழுகின்ற இந்த வையகத்திலே மனிதனை ஆற்றுப்படுத்துகின்ற அல்லது வழிப்படுத்துகின்ற நெறிமுறைகளே விழுமியப்பண்புகள் எனப்படும். இந்த உலகத்தில் பல மனித இனங்கள் பல மதங்களை பின்பற்றுகின்ற மனிதர்கள் வாழுகின்ற போதிலும் அவர்களை இற்த வலகத்திலே நெறிப்படுத்துகின்ற அம்சங்களாக சமூக, சமய விழுமியப்பண்புகள் அமைகின்றன. அந்த வகையில் கடமைகளை செய்வனவே செய்தல் வாய்மையுடன் வாழுதல், "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற மகுட வாசகத்திற்குகிணங்க ஏழை எழியவர்களுக்கு தானதர்மம் செய்தல், உண்மை பேசுதல், இனியவை கூறுதல் மூத்தோர்களை மதித்தல் போன்ற பல அம்சங்களைக் குறிப்பிடலாம்.

தமிழில் தோன்றிய பல அற இலக்கியங்கள் சமூதாயத்தை வழிபடுத்தக்கூடிய பல விழுமியக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. உதாரணமாக தமிழில் தோன்றிய முதற் காப்பியமான சிலப்பதிகாரம் முத்திறக்கோட்பாட்டை வலியுறுத்தி நிற்கின்றது. அதாவது அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும். உரைசலால் பத்தினியை உயந்தோர் ஏற்றுவோர் ஊழ்வனை வந்து உறுத் போன்றவையேயாகும். இதன் தொடர்ச்சியாக எழுந்த மணிமேகலை என்ற காப்பியத்தில் மணிமேகலை அட்சய பாத்திரம் ஏந்தி உணவுப் பஞ்சத்தை போக்கிய செய்தியை காண்கின்றோம். அதன் தொடர்ச்சியாக எழுந்த ஆலயங்கள் பல்லவர் காலம் தொடக்கம் இன்றுவரை சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் பஞ்சம்,பசி போன்ற பல இடர்பாடுகள் ஆலய தர்மகர்த்தா சபை மற்றும் நிர்வாக சபையூடாக மேற்கொண்டு சமூக ஒருமைப்பாட்டிற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனரா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றன.

சங்க காலத்தில் வாழ்ந்த கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரெ யாவரும் கேளீர் தீதும் நன்றும் பிறந்தவாரா" என்று பாடியுள்ளார். ஆதாவது எல்லா ஊரம் நமது ஊரெ என்றும் எல்லோரும் நமது உறவினர்கள் என்றும் நன்மையும் தீமையும் எமது செயற்பாடுகளாலேயே ஏற்படுகின்றது. என்று சமூகத்தை ஆற்றுப்படுத்துகின்றார். இவ்வுலகத்து பொமறை இலக்கியமாக விளங்குகின்ற திருக்குறள் ஒரு மனிதனுக்குரிய அறம், பொருள், இன்பம் முதலியவற்றை செவ்வனவே விளங்குகின்றது. உயிரிலும் மேலாக ஒழுக்கத்தை இவ்விலக்கியம் வலியுறுத்துகின்றது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்**
**உயிரிலும் ஓம்பப் படும்”** என்று குறிப்பிடப்படுகிறது

உயிரிலும் பார்க்க மானம் மற்றும் வாய்மையே உயர்ந்தது என்றும் உலகிற்கு காட்டியவர்கள் நாயன்மார்கள் மேலும் எமது சமூகத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே காணப்படும் உறவு என்பது உன்னதமான ஒரு விழுமியப் பண்பாகும். ஆனால் இன்று ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஒரு சீரற்ற உறவு நிலையே காணப்படுகின்றது. இதுவே எமது சமூகத்தின் இன்றைய கல்வியின் பின்னடைவுக்கு பிரதான காரணமாகும்.

எனவே வகுத்து தொகுத்து நோக்கும் போது எமது சமூகத்தில் விழுமியப்பண்புகள் கடைப்பிடிக்கப்படாமையாலும் அவை சரியான முறையில் கடத்தப்படாமையாலே பல வன்முறைகள் நிகழ்கின்றது. இவற்றை குறைப்பதற்கு சமூகசமய நிறுவனங்களான ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் அறநெறிப் பாடசாலைகள் சமூகத்தை வழிப்படுத்துவதன் மூலம் பண்பும் அறமும் உள்ள ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பலாம் என்பது ஒரு அதீத நம்பிக்கையாக காணப்படுகின்றது.

## சிவசூத்திரம் (1/112)

**சிவபெருமானை பார்த்து தேவி சில கேள்விகள் கேட்கிறார்.அதற்கு சிவபெருமான் கூறும் பதில்கள் தான் சிவ சூத்திரம் அல்லது விஞ்ஞான் பைரவ தந்திரா என அழைக்கப்படுகிறது.இந்த பிரபஞ்சத்தின் இரகசியம் என்ன? இந்த பேரண்டத்தின் இரகசியம் என்ன? உன் இருப்பின் இரகசியம் என்ன? என் போன்ற அடியார்கள் உன்னை கண்டு கொள்வது எவ்வாறு? உன்னை அடைவது எப்படி?இப்படி பல கேள்விகளை கேட்கிறார்.இதற்கு இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் சிவபெருமானுக்குசூத்திரமென்றால் மிகப்பெரிய விடயத்தை இரத்தினச் சுருக்கமாக சொல்வது. எளிய முறையில் விடையை பெற்றுக் கொள்வதற்கான அணுகுமுறை/ நுட்பம்/ நுணுக்கம் என்று பொருள்படுத்திக் கொள்ளலாம்.சிவபெருமான் நூற்றிபன்னிரண்டு முறைகளை தேவிக்கு கூறுகிறார்.**

**இதில் எல்லாவற்றையும் தெரிந்திருக்க வேண்டுமென்று அவசியமில்லைஇதில் ஏதாவது ஒரு நுட்பத்தை பயன்படுத்தி தன்னை அடைய மாட்டார்களா? என்பதே சிவபெருமான் கூறுவதின் நோக்கம்முதலாவது சூத்திரம் இதுதான்உள் மூச்சுக்கும் வெளிமூச்சுக்கும் இடையிலுள்ள இடைவெளியை கவனி(Watch the gap between the breaths)இரண்டு மூச்சின் இடைவெளியில் என்னை கண்டு கொள்ளலாம் . என்னை பற்றிக் கொள்ளலாம். என்று கூறுகிறார்.ஒரு இடத்தில் அமர்ந்திருந்து பத்து நிமிடங்கள் மூச்சை கவனிக்க பழகுங்கள்.மூச்சை கவனிக்க கவனிக்க உங்கள் மூச்சு ஆழமாகும் நீளமாகும் மெதுவாகும்உங்களில் உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் மிகையாய் மேம்படுவதை காணலாம்.ஒரு நிலையில் நீங்கள் சிவனை பற்றிக் கொள்ளலாம். சிவ அனுபவத்தை அண்டப் பெருவெளி தரிசனத்தை காணலாம்.இன்றைய வாழ்வில் நேரத்தை ஒதுக்குவது மிக கடினமான ஒன்றாக காணப்படுகிறது. நீங்கள் பயணம் செய்யும் போது காத்திருக்கும் போது சும்மா அமர்ந்திருக்கும்போது மூச்சில் இடைவெளியை கவனிக்க தொடங்குங்கள். மனிதப்பிறவிக்கு மட்டுமே இறைவனை உணரும் பாக்கியம் உண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடல், உளச்சமநிலை பேணலில் யோகக்கலையின் வகிபாகம்

ஸ்ரீ. நதிபரன்
யோகா போதனாசிரியர்

உலகில் நிகழும் பிறப்புகளில் மனிதப் பிறப்பானது காத்திரத் தன்மையானது. சாதாரணமாக மனித உடல், உளக் கூற்றியலை ஆய்வுக்குட்படுத்தினால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக அமைப்பு, தோற்றம், வளர்ச்சி, மாற்றம், தேய்வு, மறைவு என்றவாறு வேறுபட்டிருப்பதனை அறிய முடியும். இவ்விகாரங்களை நுணித்தாய்வு செய்கையில் ஒவ்வொரு கணப்பொழுதும் அவை மாற்றமடைந்துகொண்டிருக்கின்றமையை ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. அதுமாத்திரமன்றி கால, தேச, வர்த்தமானங்களுக்கேற்பவும் அடிப்படை அலகுகளில் கூட மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றமையும் கவனிக்கத்தக்கது. வாழ்வியலின் சீரான - தொடர்ச்சியான பயணிப்பிற்கு உடல், மனம், ஆன்மா (மூச்சு) ஆகிய மூன்றின் இயக்கப்பாடுகளும் ஒன்றுக்கொன்று ஒத்ததன்மையுடையதாகவும் ஒருங்கிசைவானதாகவும் இருக்க வேண்டும். பொதுப்படையாக நோக்கினால், நாம், உடலியல் சார் அமைப்பு மற்றும் அதன் இயக்கப்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள், பாதிப்புகள் ஏற்படும்போது அவற்றை புரிந்துகொண்டு கருமமாற்றும் செயற்பாடுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை, உளக்கட்டமைப்பைப்பேணி, புரிந்து எதிர்வினையாற்றும் செயற்பாடுகளுக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்காக ஆன்மிகப் பண்புகளை பூண்டொழுகி உயிராற்றலை வளம்படுத்தும் பொறிமுறைகளுக்கும் கொடுப்பதில்லை என்கின்ற யதார்த்தமும் வெளிப்படையானது. மேலும், மனிதமனதின் இயக்கப்பாடுகள் பற்றிய ஆய்வுத்தளத்தில் மனவியல்சார் விடயங்கள் பற்றிய புரிதல்கள் உளவியல் வல்லுனர்களிடையே பலவித கருத்துநிலைகளை தோற்றுவித்தாலும் பொதுமைத்தன்மையான புலங்களில் ஒன்றுபடுவதை அவர்களது ஆய்வுப்பரப்புகள் வெளிப்படுத்தி நிற்பதனையும் நோக்கமுடியும். உடல் அமைப்பு அதன் செயற்பாடுகள் பற்றிய விஞ்ஞானரீதியான ஆய்வுகளில் மருத்துவவியல் துறைசார் புலமை யாளர்களிடையே நிறுத்திட்டமான முடிவுகளில் ஒருங்கிசைவை அவதானிக்க முடிகின்ற அதேசமயம் உளம் பற்றியதான ஆய்வுப்பரப்பில் பல்வேறு விதமான முரண்நிலைகள், ஐயப்பாடுகள் காணப்படுகின்றமையானது மனம் என்ற எண்ணக்கருவானது ஆய்வுத்துறைகளுக்கு சவால் நிறைந்ததாக திகழ்கின்றது என்பது புலனாகும். எது எப்படியென்றாலும் உடல், உளச் சமநிலை பேணல், வாழ்க்கையின் பேண்தகு நிலைக்குமட்டுமல்ல ஆத்மிக ரீதியிலான பண்பியல்களின் உயர்ச்சிக்கும் அத்திபாரமாகும் என்ற அன்றைய மெஞ்ஞானிகளான யோகிகள், சித்தர் பெருமக்களின் அடிப்படைக் கோட்பாட்டு நெறிமுறைகளுடன் இன்றைய விஞ்ஞானிகளது கருத்தியல்களும் ஒத்துப்போகின்றமையை அவதானிக்கலாம்.

எமது உடலானது அமைப்பு ரீதியாக ஒன்பது மண்டலங்களாக - தொகுதிகளாக (Systems) பிரிக்கப்படுகின்ற அதேவேளை, தொழிற்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியிலும் இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று இடைத் தொடர் புள்ளவையாகவும் காணப்படுகின்றன. அவை, இரத்த ஓட்டமண்டலம் (Circulatory System), சமிபாட்டு மண்டலம் (Digestive System), இனப்பெருக்க மண்டலம் (Reproductive System), அகஞ்சுரக்கும் மண்டலம் (Endocrine System), சுவாசமண்டலம் (Respiratory System), நிணநீர் மண்டலம் (Lymphatic System), கழிவகற்றும் மண்டலம் (Excretory System), நரம்புமண்டலம் (Nervous System) மற்றும் எலும்புதசை மண்டலம் (Musculoskeletal System) என்றவாறாக ஒன்பது பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் நெருங்கிய தொடர்புடையதான உடலில் தலையாயதாக ஐந்து உறுப்புக்கள் காத்திரத்தன்மை பொருந்தியவையாக விளங்குகின்றன. மூளை, இதயம், கல்லீரல், நுரையீரல்கள் மற்றும் சிறுநீரகங்கள் என்பவையே அவையாகும். ஏனையவை துணை உறுப்புகளாக அமைகின்றன. இங்கு உடலியற் செயற்பாடானது சங்கிலித்தொடர் போன்றது. ஒரு மண்டலத்திலோ அல்லது ஏதேனும் உறுப்பு ஒன்றிலோ ஏற்படும் பாதிப்பு ஏனையவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தவல்லவையாகும். மேலும் உடலியக்கப்பாட்டில் மனவியற்கோலங்களும் முதன்மைபெற்றிருப்பதனை ஆய்வுக்குட்படுத்தும் போது, மனதின் செலநெறிக்கேற்பவே மூளையும் அதனுடன் தொடர்புடையதான நரம்புத்தொகுதிகளும் இயங்குவதுடன் அவற்றின் கட்டளைக்கேற்ப நாளமில்லாச்சுரப்பிகளும் தூண்டப்பட்டு நொதியங்களை சுரக்கின்றன. இவற்றின் துணையோடுதான் அங்கங்களும் அதனோடு பின்னிப்பிணைந்துள்ள தொகுதிகளும் இயங்குகின்றன என்பதை அறிய முடியும்.

– தொடரும் –

**சிவத் தியானம் குறித்து அருமையாக தெய்வத் தமிழில் விளக்கும் சுந்தரர் நீள நினைதல் எனும் அருமையான செந்தமிழ் சொல்லை தியானம் குறித்து எடுத்தாள்கின்றார். தியானம் அட்டாங்க யோகத்தில் முக்கியமான படிநிலை ஆகும். தியானத்தினூடாக தம்மை அறியும் நிலை கைகூடும். இறை சிவன் சுந்தரர் வாழ்வில் உதவியது போல எம் மனம் ஒன்றிய சிவ சிந்தைக்காக இகபர சுகங்களை அருள்வான்.**





**ஈழத்து சிவயோக சுவாமிகளும் இதனை ஆழமாக வலியுறுத்தி நல்லூரிலும் கொழும்புத் துறையிலும் வண்ணையிலும் செங்கலடியிலும் தியான நிலையில் இருந்து மக்களை வழிப்படுத்தினார் யாழ்.இந்து கல்லூரி அருகில் காங்கேசன் துறை சாலையில் உள்ள யோகர் சுவாமி எமக்களித்த சிவதொண்டன் தியான மண்டபம் சித்தத்தை சிவன்பால் தியானிக்க விரும்புவோருக்கு அறக்கொடை ஆகும்.**

**நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்**
**வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்**
**ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரச நாயனாரின் எண்ணக்கருவில் இறை வழிபாடு

திருநாவுக்கரசர் சைவ சமயக்குரவர்களில் ஒருவராவார். இவர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். சமணசமயத்தின் ஈர்ப்பினால் சைவசமயத்தில் இருந்து சமண சமயத்திற்கு மதம் மாறினார். பின்னர் திருநாவுக்கரசர் சிவபொருமனால் சூலை நோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டார். இதனால் மீண்டும் தனது தாய்ச்சமயமான சைவசமயத்திற்கு வந்தார். அன்று முதல் அவரது இறுதிக் காலம் வரையான என்பத்தொன்று வயது வரை சைவசமயத்திற்கே இறை தொண்டு ஆற்றியுள்ளார்.

திருநாவுக்கரசர் எண்ணக்கருவின் அடிப்படையில் இறைவனை எப்படி வணங்க வேண்டும் என்பது பற்றி கூறியுள்ளார். இதற்கு தக்க சான்றாக நாவுக்கரசரின் முதற் பதிகமான "கூற்றாயினவாறு விலக்கலீர்..." எனும் தேவார பதிகத்தில் இடம் பெற்றுள்ள அடிகளின் மூலம் இறைவனை வணங்குவது பற்றி கூறியுள்ளார்.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோ டிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்..."

எனும் அடிகளில் இறைவனை வழிபடும் போது தூயநீர் கொண்டு இறைவனை முழுக்காட்டி பூக்கள், பூமாலைகளை இறைவனுக்கு சாற்றி தீபம் ஏற்றி பின்னர் தமிழோடு இசைபாடி வணங்க வேண்டும். நல்ல நிகழ்வுகளோ, தீய நிகழ்வுகளோ எமக்கு நிகழும் போது இறைவனுடைய நாமத்தை உச்சரிக்க மறக்கலாகாது என கூறுகின்ளார்.

தற்காலத்தில் ஆலயங்களில் திருவிழாக்கள், அர்ச்சனைகள், பொங்களல் என்பன முக்கியமான வழிபாடுகளாக பார்க்கப்படுகின்றன. இவற்றை செய்வதன் மூலம் இறைவழிபாடு நிறைவேறி விடுவதாக பலரும் எண்ணுகின்றார். அவ்வாறல்லாது திருநாவுக்கரசர் இறை சிந்தனையில் உதித்ததை போன்று ஆலயங்களில் இறைவனை சலம், பூக்களுடன் தமிழில் இறைவனுக்குரிய தேவாரங்களை பாடி வழிபடுவதே சாலப் பொருந்தும் அதையே இறைவனும் விரும்பி ஏற்கின்றார்.

**தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி**
**திருகோணமலை.**
**கோ. நிரோஜினி**

**ஆனைந்து எனப்படும் பஞ்சகவ்வியம் குறித்து நாவுக்கரசர் இறை சிவன் அபிடேக தீர்த்தமாகிய பஞ்சகவ்வியா மிகச் சிறந்த இயற்கை பயிர் ஊக்கி ஆகும் இன்று மருத்துவர் நடராஜனால் மீள கண்டறியப்பட்டு நம்மாழ்வாரால் பிரச்சாரப் படுத்தப்படுத்தப்பட்டு தமிழகத்திலும் ஈழத்திலும் உலகெங்கும் மிகச்சிறந்த இயற்கை விவசாய பயிர் ஊக்கியாக, உரமாக விதை பரிகரிக்கும் அமுதமாக பயிருக்கு நோய் எதிர்ப்புச் சக்தியையும் ஊட்டத்தையும் வளர்ச்சி பதார்த்தமாக இலை வழி தெளிக்கப் படுகின்றது. அரன் அஞ்சாடும் ஆனைந்து - பால், தயிர், நெய், கோசலம், பசுஞ்சாணம்**



**பூவினுங் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுங் கருங்கலம் அரணஞ் சாடுதல்
கோவினுங் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுங்க கருங்கலம் நமச்சிவாயவே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் புகழ் பாடுவோம்



நல்லூரை நாளும் நாடுங்கள்
நல்லூரான் புகழை பாடுங்கள்

நல்லைநகர் வாழும் கந்தனை
நாடி வந்தேனே
எல்லை இல்லாத ஆனந்தத்தில்
என்னை மறந்தேனே

கல்லைக்கூட கரைக்கும்
கருணை கண்டேனே
தொல்லையில்லாத வாழ்வுக்குள்
தொலைந்து போனேனே

வெள்ளம் போல அன்பு பெருக
வெள்ளந்தி ஆனேனே
உள்ளம் உருகி உறைந்து போகும்
உணர்வு கொண்டனே

அலங்காரம் கொண்டு அழகன்
அசைந்தாடி வந்தானே
அலைபாயும் மனமங்கே
அசைவுற நின்றேனே

வேல்கொண்டு விளையாடும்
வேலவனை கண்டேனே
வினையெல்லாம் பறந்தோடும்
விந்தையினை வியந்தேனே

– எந்திரி. சர்வா சர்வானந்தன்

**உருவாய் அருவாய், உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்**
**கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்**
**குரவாய் வருவாய், அருள்வாய் குகனே.**

**– அருணகிரிநாதர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசபக்தன் இராவணன்

திருமுறைகளில் ஈசனுக்கு அடுத்ததாக, கையாளப்படும் ஒரு ஈச பக்தர் யாரென வினவினால், அது இராவணன் (சிவதாசன்) என்றால் அது மிகையாகாது. **"இராவணன்"** எனும் பெயருக்கு (சிகிரியாவிலிருந்து) இரவை ஆள்பவன் (வானியலாளன்) இறைவனை இரைந்து பாடியவன் (சமாகானம்) எனப்பல விளக்கங்கள் கூறப்படுகின்றன. நவீன விஞ்ஞானம் இன்றும் தேடிக்கொண்டிருக்கும் வானியலை அன்றே தன்பெயரில் தாங்கியவன்.

## "இராவணன்மேலது நீறு"

இராவணன் என நேரடியாக கூறாவிட்டாலும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போர் பல இடங்களில் இராவணனை குறிப்பிட்டுள்ளார்கள். சம்பந்தரோ தான் பாடிய 361 பதிகங்களின் (384 தேவாரப்பதிகங்கள்) எட்டாவது பாடலில் இராவணன் பற்றி குறிப்பு சொல்கிறார். அப்பரோ ஒருபடி மேலேபோய், கைலாய மலையையே தூக்க முனைந்த இராவணனுக்கு இருள் புரிந்ததுபோல், தனக்கும் அருள்புரியுமாறு இரைஞ்சுகிறார். மாணிக்கவாசகர் இராவணின் துணை வண்டார் குழலியின் (மண்டோதரி) ஈசபாசம் குறித்து விபரித்துள்ளார்.

ஈழத்தின் ஈசவழிபாட்டை, இராவணிடம் இருந்துதான் தொடங்க வேண்டும். முன்னோர்கள் அமைத்த கேதீச்சரம், முன்னேச்சரம், நகுலேச்சரம், கோணேச்சரம், தொண்டேச்சரம் போன்ற ஈழத்தை சுற்றி அரணாகவுள்ள ஈச்சரங்கள் இராவணனால் புனரமைப்பு செய்யப்பட்டன. நாளாந்தம் இவ் ஈச்சரங்களுக்கு விமானம் மூலம் சென்று இராவணன் வழிபாட்டில் ஈடுபட்டாராம்.

பத்துத்தலைகள் என்பதனால், பத்துத்திசைகளை ஆண்டவன், பத்துதேசங்களை ஆண்டவன், பத்துக்கலைகளில் சிறந்தவன், மற்றும் உடலிலுள்ள பத்து வாயுக்களை கட்டுப்படுத்த் தெரிந்தவன் எனப்பல குறியீடுகள் கூறப்படுகின்றன.

திருமுறைகளிலிருந்து இராவணை விட்டுவிட்டு, கம்பனின் வன்ம கற்பனைக்கதை கம்பராமாயணத்தில் இராவணனை தமிழர்கள் கண்டனர். அதன் விளைவு ஈழத்தின் சுதேச நாயன்மார் ஒருவர் தவிர்க்கப்பட்டுள்ளார். முந்நூறுக்கு மேற்பட்ட வேறுபடும் இராமாயண கதைகளிலும், இராவணனின் தீவிர சிவபக்தி, தவவலிமை, இசை, வானவியல், மருத்துவம், தாய்பாசம், ஆட்சி சிறப்பு, போர்த்திறமை, யோகசித்தி, கலை போன்றவற்றின் சிறப்புக்கள் பறைசாற்றப்படுகின்றன.

இரா.தர்சன்

பட்டயக் கணக்காளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் சிவதொண்டர் / சிவமங்கையர் அமைப்பு உறுப்பினர் விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர் :- ..............................................................

பாடசாலையின் பெயர் :-..............................................................

கற்கும் தரம் :- ..............................................................

பிறந்த திகதி :- ..............................................................

முகவரி :- ..............................................................
..............................................................

பெற்றோர் தொலைபேசி இல:- ..............................................................

..................................... ..................................... 
திகதி கையொப்பம்

.............................................
சைவசமய பாட ஆசிரியர்
கையொப்பம்

**தமிழ்ச் சைவ பேரவையின் வழிகாட்டலில்**
**அகில இலங்கை சைவ மகாசபை நடாத்தும்**
**<u>இணைய வழி திருமந்திர பேச்சுப்போட்டிகள் – 2022</u>**

**மழலை திருமந்திரப் பேச்சாளர் (தரம் 01 - 03) 2 - 3 நிமிடம்**
**தலைப்பு – "ஒன்றே குலம்"**

**இளம் திருமந்திரப் பேச்சாளர் (தரம் 04 - 05) 4 - 5 நிமிடம்**
**தலைப்பு – "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைபிடி"**

**இடைநிலை திருமந்திரப் பேச்சாளர் (தரம் 06 - 08) 5 - 6 நிமிடம்**
**தலைப்பு – "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"**

**முகிழ்நிலை திருமந்திரப் பேச்சாளர் (தரம் 09 - 11) 6 - 7 நிமிடம்**
**தலைப்பு – "உடம்பினுள் உறுபொருள் கண்டேன்"**

**சுயவிபரத்துடன் பாடசாலை / அறநெறிப்பாடசாலை அதிபரின்கையொப்பத்துடன் விண்ணப்பிக்கவும்.**
**அனுப்ப வேண்டிய வழிமுறைகளுக்கு அலுவலக காரியதாரிசியை தொடர்புகொள்க**
**(077 0756333)**

**விண்ணப்ப முடிவுத் திகதி 01.10.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சைவத் தமிழ் வரலாற்றில் 2022



200 வது அவதார ஆண்டில்
**நாவலர்**

75 வது சிவபத ஆண்டில்
**விபுலானந்தர்**



**சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர்**
**(18.12.1822 - 05.12.1879)**

நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே
எல்லவரும் ஏத்து புராண
ஆகமங்கள் எங்கே பிரசங்கம் எங்கே
அத்தன் அறிவு எங்கே அறை.

**சுவாமி விபுலானந்தர்**
**(27.03.1982 - 19.07.1947)**

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியினைக்கு வாய்த்தமலரேதுவோ
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது..

## ஆவணி - புரட்டாதி தமிழ் மாதத்தில் வரும் நாயன்மார்களின் குருபூசைகள்

| | | |
|---|---|---|
| ஆவணி பூசம் | (25.08.2022) | செருத்துணை நாயனார் |
| ஆவணி ஆயிலியம் | (26.08.2022) | அதிபத்த நாயனார் |
| | | புகழ்துணை நாயானர் |
| ஆவணி மகம் | (27.08.2022) | இளையான்குடிமாற நாயனார் |
| ஆவணி அனுசம் | (03.08.2022) | குலச்சிறையார் நாயனார் |
| ஆவணி மூலம் | (05.09.2022) | குங்கிலிய கலய நாயனார் |
| புரட்டாதி உத்தராடம் | (04.10.2022) | ஏனாதிமாற நாயனார் |
| புரட்டாதி சதயம் | (07.11.2022) | நரசிங்க முனைய நாயனார் |
| புரட்டாதி அச்சுவினி | (07.10.2022) | உருத்திர பசுபதி நாயனார் |







ஈழத்தில் நாயன்மார் பெயர் விளங்கும் அறுபத்துமூவர் குருபூசை மடங்கள் நல்லூரிலும், சுழிபுரத்திலும் அமைந்துள்ளன.

**சைவமுரசுக்கான ஆக்கங்கள், ஆலோசனைகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்.**
முகவரி : சைவமுரசு, பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில். தொ.பே : 021 2212414, 077 07756333
மின்னஞ்சல் : saivamurashu@gmail.com இணையத்தளம் : saivamurashu.blogspot.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org